# கோவிட் – 19 (COVID-19) தொற்று பரவலின்போது ப்ராம்ப்ட்டன் நகரில் 2020 ஆம் ஆண்டின் விக்டோரியா தினம் அனுசரிப்பு

ப்ராம்ப்ட்டன், ON (மே 12, 2020) – இந்த ஆண்டின் விக்டோரியா தினமானது மே 18, திங்கட்கிழமையன்று நிகழ்கிறது .

பீல் ப்ப்ளிக் ஹெல்த் (Peel Public Health) லிருந்து பெற்ற வழிகாட்டுதலின் பேரிலும், மற்றும் நமது குடியிருப்பு வாசிகள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பு கருதியும், நகரின் அரங்கம் மற்றும் பொழுதுபோக்கு மற்றும் சமுதாய மையங்கள், ப்ராம்ப்ட்டன் நகர நூலகக் கிளைகள் உள்ளிட்ட இதர ப்ராம்ப்ட்டன் நகர வசதியமைப்பு கட்டிடங்கள், கோவிட் – 19 (COVID-19) தொற்று பரவுதலை முன் கூட்டியே தடுப்பதில் உதவுவதற்காக, அடுத்த அறிவிப்பு வரும் வரை மூடப்பட்டே இருக்கும்.

தீயணைப்பு மற்றும் அவசரகாலச் சேவைகள், போக்குவரத்துச் சேவைகள், சட்ட அமலாக்கம், சாலைப்பணிகள், POA நீதிமன்றங்கள் மற்றும் பாதுகாப்பு சேவைகள் ஆகியவை நமது சமூகத்தினருக்கு ஆதரவளிப்பதற்காக, வழக்கம்போல் தொடர்ந்து செயல்படும்.

ஏதேனும் விசாரிப்புக்களுக்கு குடியிருப்பு வாசிகள் 311 அல்லது 905.874.2000 (ப்ராம்ப்ட்டன் நகருக்கு வெளியில்) என்ற எண்களை அழைக்கலாம், Brampton 311 செயலியை [ஆப் ஸ்டோர்(App Store) அல்லது கூகிள் ப்ளே (Google Play) யில் கிடைக்கும்] உபயோகிக்கலாம்; www.311brampton.ca எனும் வலைத்தளத்திற்கு வருகை தரலாம் அல்லது 311@brampton.ca என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பலாம். ப்ராம்ப்ட்டன் நகரம் அல்லது பீல் பிராந்தியம் தொடர்பான விஷயங்களுக்கு 24/7 என்ற முறையில் நாங்கள் செயல்படுகிறோம்; இதில் கோவிட் – 19 (COVID-19) தொற்று பரவலின் பேரிலான வரி தள்ளிவைப்பு, உடல்ரீதியான சமூக விலகல், மற்றும், பூங்காக்கள் மற்றும் கட்டிடங்கள் மூடியிருத்தல் ஆகிய விஷயங்கள் அடங்கும். மேலும் தகவல்களுக்கு வருகை புரியவும்: www.brampton.ca/covid19.

**விக்டோரியா தினத்தைக் கொண்டாடுங்கள் –ஆன்லைனில்!!**

ப்ராம்ப்ட்டன் நகரவாசிகள் விக்டோரியா தினத்தை தங்கள் வீடுகளில் இருந்தபடியே கொண்டாடுவதற்காக, நகர நிர்வாகமானது ஒரு ஆன்லைன் கூடுமிடத்தை உருவாக்கியிருக்கிறது; இதில் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களுக்கு பிடித்தமான செயல்பாடுகள் இருக்கும், இதன் மூலம் சிற்றுண்டியகங்களில் இருந்து தங்களுக்கு வேண்டிய சிற்றுண்டிகளை வாங்கிக்கொண்டு வருவதற்கான வாய்ப்புகள், பட்டாசுகளாலான நிகழ்நேர வாண வேடிக்கை காட்சி ஆகியவை SnapdHUB யினால் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

ஹே ப்ராம்ப்ட்டன் (Hey Brampton) –இன் ஒரு அங்கமாக விக்டோரியா தினத்தன்று உள்ளூர் சிற்றுண்டியகங்களில் இருந்து தங்களுக்கு வேண்டிய சிற்றுண்டிகளை ஆணையிட்டு பெற்றுக்கொள்ள குடியிருப்புவாசிகள் உற்சாகமளிக்கப்படுகின்றனர்! லெட்ஸ் ஈட்! (Let's Eat!), இது *எக்ஸ்பீரியன்ஸ் ப்ராம்ப்ட்டன்* (Experience Brampton) யினால் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு பிரச்சாரம். உங்கள் வீட்டு கொல்லைப்புறத்தில், அல்லது முன்வாசல் பூங்காவில் அல்லது கார் வரும் பாதையில் அல்லது உங்கள் வீட்டில் உங்களுக்கு பிடித்தமான ஒரு இடத்தில், ஒரு பிக்னிக் போன்ற சூழலை உருவாக்கி, கூட்டாக அமர்ந்து சாப்பிடும் நிகழ்வை, மறக்க முடியாத ஒன்றாக ஆக்கிக்கொள்ளுங்கள். இந்த நிகழ்வை படம் பிடித்து சமூக ஊடகங்களில் பகிர்ந்து கொண்டு #ப்ராம்ப்ட்டன்டுகெதர் ( #BramptonTogether) வாசகத்தை உடல்ரீதியாக இடைவெளி விட்டபடியான கொண்டாட்டத்தின் ஒரு அங்கமாக்குங்கள். அதாவது எட்ட இருந்தபடியே கூடியிருங்கள்.

ஒன்ட்டேரியோவில் இருக்கும் அண்டை அயலாருடன் நிஜம் போலவே தோற்றம் தரக்கூடிய பரவசமான பட்டாசு கொளுத்துதல்/வெடித்தல் நிகழ்ச்சிகளை கண்டுகளியுங்கள்! பாரம்பரியமாக நடைபெறுகின்ற, நேரடியாகவே நடத்தப்படும் விக்டோரியா தின பட்டாசு கொளுத்துதல்/வெடித்தல் நிகழ்ச்சிக்கு மாற்றாக, பாதுகாப்புடன் கூடிய ஒரு கொண்டாட்டத்தை, நிஜம் போலவே தோற்றம் தரக்கூடிய இந்த பட்டாசு கொளுத்துதல்/வெடித்தல் காட்சியை நகர நிர்வாகம் நகரவாசிகளுக்கு வழங்குகிறது. நிஜம் போலவே தோற்றம் தாக்கூடிய இந்தக் காட்சியானது இரவு 8 மணிக்கு ஆன்லைனில் துவங்குகிறது; பட்டாசு வெடிப்பதற்கான கவுன்ட்-டவுன் மாலை 7:50 க்கு ஆரம்பிக்கிறது. பட்டாசு வெடிக்கும் காட்சிகளுக்கான லின்க் மற்றும் இதில் பங்கேற்கின்ற சிற்றுண்டியகங்கள் பற்றிய விபரங்களுக்கு வருகை தரவும்:www.brampton.ca/victoriaday

**பட்டாசு கொளுத்துவதில் பாதுகாப்பு**

ப்ராம்ப்ட்டன் நகரில் உரிமம் ஏதும் பெறத் தேவையில்லாமல், தனியார் இடங்களில் ஓரளவுக்கே பட்டாசு வெடிக்க அனுமதிக்கப்படுகின்ற நான்கு நாட்கள் உள்ளன: விக்டோரிய தினம் என்பது, அவற்றில் ஒன்றாகும். மற்றவை கனடா தினம், தீபாவளி மற்றும் புத்தாண்டு தினம் ஆகியவை ஆகும்.

குறுகிய தூர வேடிக்கை பட்டாசு என்பது, தீப்பற்றியதும் 3 மீட்டர்கள் (10 அடி) தூரம் மட்டுமே செல்லக்கூடிய வகைகளாகும் (உதாரணமாக, தரைச் சக்கரம், புஸ்வாணம், கைச் சக்கரம் மற்றும் வெடிகள்). மற்ற ராக்கெட் வகை பட்டாசுகளுக்கு ப்ராம்ப்ட்டன் நகரில் அனுமதியில்லை. வீதிகளிலோ, பக்க வாட்டு நடைபாதைகளிலோ, நகரின் பூங்காக்களிலோ அல்லது நகராட்சி மற்றும் பள்ளி இருப்பிடங்களிலோ இந்த பட்டாசு வெடித்தல் செய்ய நகரவாசிகளுக்கு அனுமதியில்லை என்பதை நகர நிர்வாகம் நினைவூட்டுகிறது.

குறுகிய தூரம் சென்று வெடிக்கக் கூடிய பட்டாசுகளை உபயோகிக்கும்போது, குடியிருப்பு வாசிகள் பின் வரும் முன்னெச்சரிக்கைகளைப் பின்பற்ற வேண்டும்:

- தீயை அணைக்கும் விதமாக ஒரு பாத்திரம் நிறைய தண்ணீர் வைத்துக்கொள்ள வேண்டும் அல்லது தண்ணீர் வரக்கூடிய குழாய் அருகில் வைத்துக்கொள்ள வேண்டும்
- மத்தாப்புக்கள் அல்லாத, வெடிக்கக் கூடிய ஒரு பட்டாசு போன்றவற்றை ஒருபோதும் கையில் பிடித்து பற்ற வைக்கலாகாது.
- மற்றவர்களை நோக்கி பட்டாசுகளை வீசாதீர்கள் அல்லது காட்டாதீர்கள்
- மத்தாப்புக்கள் எரிந்து முடிந்த பின்னர் அவற்றை அப்புறப்படுத்தும் முன்பாக தண்ணீர் நிறைந்த ஒரு பாத்திரத்தில் இடவும்.
- அப்புறப்படுத்தும் முன்பாக அனைத்து பட்டாசு வகைகளும் குளிர்விக்கப்பட வேண்டும்

ஒவ்வொரு வருடமும், பட்டாசு விற்பனையாளர்கள் அனைவரும் அவற்றை விற்பனை செய்ய உரிமம் பெறும் முன்பாக நகர நிர்வாகம் அளிக்கின்ற பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். இந்த வருடம் எந்த பயிற்சிகளும் நடத்தப்படவில்லை மற்றும் எந்த உரிமமும் அளிக்கப்படவில்லை. ப்ராம்ப்ட்டன் நகரினுள்ளாக பட்டாசுகள் விற்பனை ஏதேனும் கடைகளில் நடைபெறுவதைப் பார்க்கும் நகர வாசிகள் அதுபற்றி ப்ராம்ப்ட்டன் 311 (Brampton 311)எனும் செயலி மூலமாகவோ, ஆன்லைனிலோ அல்லது 311 எனும் எண்ணை அழைத்தோ புகார் தெரிவிக்கலாம். கோவிட் – 19 தொற்று பரவல் சமயத்தில் ஐந்துக்கும் மேற்பட்ட நபர்கள் ஒரு பொது இடத்தில் கூடுவது பற்றி கவலை தெரிவிக்கவோ, அல்லது தடைசெய்யப்பட்ட பட்டாசுகளை எவரேனும் வெடித்தாலோ சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் ( Service Brampton) அமைப்பை அழைக்குமாறு நகரவாசிகள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**கோவிட் – 19 (COVID-19) பாதுகாப்பு நடவடிக்கைகள்**

கோவிட் -19 (COVID-19) தொற்று பரவலை சமாளிப்பதில், வீட்டுக்கு வெளியிலாக பாதுகாப்பாக இருப்பதற்கு, நமது சமுதாயத்தினர் மனதில் கொள்ள வேண்டிய முக்கியமான ஒழுங்குமுறைகள் மற்றும் விதிகள் உள்ளன.

- பீல் பகுதி குடியிருப்புவாசிகள் வீட்டை விட்டு வெளியில் இருக்கும்போது கூட்டத்தைத் தவிர்க்கவும், மற்றும் ஒருவருக்கு ஒருவர் இடையில் போதுமான தூரத்தைக் (உடல்ரீதியான இடைவெளி விடும் பழக்கத்தைக் ) கொண்டிருக்கவும் ஊக்கமளிக்கப்படுகிறார்கள். தங்களுக்கான அத்தியாவசியத் தேவைகளுக்காக தங்கள் வீட்டுக்கும் மிக அருகில் இருக்கும் இடங்களுக்கு மட்டுமே செல்லவேண்டும். மருத்துவ நிலைமை ஏதும் கொண்டிருப்பவர்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்கள், அல்லது 70 க்கும் அதிகமான வயதுடையோர் வீட்டை விட்டு வெளியில் வராமல் வீட்டிற்குள்ளேயே இருந்துவிட வேண்டும். தனியாகத்தான் உடற்பயிற்சி செய்யவேண்டும்

- அடுத்த அறிவிப்பு வரும் வரை, ப்ராம்ப்ட்டன் நகரில் இருக்கின்ற 500 க்கும் அதிகமான அனைத்து பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் பூங்காக்களில் இருக்கும் இதர கட்டுமானங்கள், கட்டவிழ்த்துவிடப்பட்ட நாய்கள் சுதந்திரமாக திரிவதற்கான பூங்காக்கள், பிக்னிக் நிழற்குடைகள், வெளிப்புற விளையாட்டு வசதியமைப்புக்கள் மற்றும் வெளிப்புற உடற்தகுதிக்கான சாதனங்கள்

(விளையாட்டுக்களங்கள், கூடைப்பந்து மற்றும் டென்னிஸ் மைதானங்கள் உள்பட), பொழுதுபோக்கு மையங்கள் மற்றும் அதன் சுற்றுப்புற மைதானங்கள், நகர கட்டிடங்களில் இருக்கின்ற வாகனம் நிறுத்துமிடங்கள் ஆகியவை பொது மக்கள் பயன்பாட்டுக்கு இல்லாமல் மூடப்படும். இதனைக் கடைப்பிடிக்காதவர்கள் பற்றி குடியிருப்புவாசிகள் 905.874.2111 என்ற எண்ணை அழைத்து புகார் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- இந்தச் சமயத்தில் பல்லுபயோக ஒற்றையடிப்பாதைகள், பயன்பாட்டிற்கு திறந்திருந்த போதிலும் மக்கள் ஒருவருக்கு ஒருவர் (உங்களுடன் வீட்டில் வசிப்போர் அல்லாதவர்) எந்த வேளையிலும் 2.0 மீட்டர் இடைவெளி விட்டு விலகி இருக்க வேண்டும். இந்த ஒற்றையடிப்பாதைகளுக்கான நில வரைபடத்திற்கு, இங்கு கிளிக் செய்யவும்

- ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் கூடுவதைத் தவிர்க்கவும் – இந்தப் பிரதேச நிர்வாகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அவசரகால மேலாண்மை மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழாக இவை அனைத்தும் தடை செய்யப்படுகின்றன.

- பயன்படுத்தப்பட்ட முக கவசங்கள், பாதுகாப்புக் கையுறைகள் மற்றும் வீட்டுப்பராமரிப்பு பொருட்களின் கழிவுகள் ஆகியவற்றை ஒரு பையில் இட்டு குப்பைத் தொட்டிகளில் இடுவதன் மூலம் அப்புறப்படுத்தவும்.

- ப்ராம்ப்ட்டன் கோவிட் -19 (COVID-19) அவசரகால நடவடிக்கைகளுக்கான சட்டத்தின் கீழாக, இப்போதெல்லாம் அபராதங்கள் விதிக்கப்படுகின்றன. உடல்ரீதியான இடைவெளி விட்டு சமூக விலகலைக் கடைப்பிடிக்காத தனி நபர்களுக்கு, குறைந்த பட்சம் $500 லிருந்து அதிகபட்சமாக $100,000 வரையிலான அபராதம் ஒவ்வொருமுறை குற்றம் புரியும்போதும் விதிக்கப்படுகிறது. இதனைக் கடைப்பிடிக்காத நிகழ்வுகள் பற்றி எண் 311 ஐ அழைத்து குடியிருப்பு வாசிகள் புகார் தெரிவிக்கலாம்.

- நமது சமுதாயத்தின் மீது கோவிட் – 19 (COVID-19) தொற்று பரவலின் தாக்கங்கள் பற்றியும் அது சிலருக்கு குறிப்பாக சிரமமானது என்றும், மற்றும் இந்தச் சமயத்தில் அது மனஅழுத்தம் தரக்கூடும் எனவும் நாம் உணர்ந்திருக்கிறோம். நமது சமுதாயத்தினருக்கு உதவுவதற்காகவே நாம் சில சிறப்பியல்பு கொண்ட பணிப்படைகளைத் துவக்கியிருக்கிறோம். இதில் பொருளாதார ஆதரவு, முதுமக்களுக்கான ஆதரவு மற்றும் தொற்றுக்கு ஆட்பட்டோருக்கான ஆதரவு ஆகியவை அடங்கும். பணிப்படைகள் பற்றிய தகவல்கள் மற்றும் அவர்களை எப்படித் தொடர்பு கொள்வது என்பது பற்றிய விபரங்கள் கிடைக்குமிடம்: www.brampton.ca/covid19.

BRAMPTON **Service and Information Update**

**ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து**

விக்டோரியா தினம் அன்று, ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையானது, ஞாயிற்றுகிழமையன்று அட்டவணைப்படி, அதே சமயத்தில் சில வழித்தடங்கள் ரத்து செய்யப்பட்டு செயல்படும்; பின்வரும் சேவைகள் இருக்கும்:

| | | |
|---|---|---|
| 1 க்வீன் | 11 ஸ்டீல்ஸ் | 50 கோர் ரோட் |
| 2 மெயின் | 14 டோர்ப்ரம் | 52 மெக்மர்ச்சி |
| 3 மெக்லாவ்லின் | 15 ப்ரமீலியா | 115 பீயர்ஸன் ஏர்போர்ட் |
| 4 சிங்க்வாகௌசி | 18 டிக்ஸீ | 501 ஸூம் க்வீன் |
| 5 பொவையர்ட் | 23 சாண்டல்வுட் | 502 ஸூம் மெயின் |
| 7 கென்னடி | 30 ஏர்போர்ட் ரோடு | 511 ஸூம் ஸ்டீல்ஸ் |

அனைத்து பேருந்து முனையங்களிலும் வாடிக்கையாளர் சேவை கவுன்ட்டர்கள் மூடப்பட்டிருக்கும். ப்ரமீலியா, ப்ராம்ப்ட்டன் கேட்வே மற்றும் டவுண்டவுன் பேருந்து முனையங்கள் இருக்கும் பகுதி செயல்படுகின்ற நேரமானது, காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை.தொடர்புக்கான மையமானது காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை திறந்தே இருக்கும்; இந்த நேரத்தில் உதவிகளும் கிடைக்கும்; அழைப்பதற்கான எண் 905 874 2999

மேம்படுத்தப்பட்ட கால அட்டவணைப்படி பேருந்துகளைத் தூய்மைப்படுத்தி அவற்றில் கிருமிநாசினி தெளிக்கும் வேலை மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு 48 மணிக்கொரு முறை பேருந்துகளின் அனைத்து பரப்புகள், இயக்குபவர் அமருமிடம் மற்றும் அனைத்து இருக்கைகளையும் கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைப்பதே ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையின் இலக்காகும். தற்சமயம் பேருந்துகள் 24 மணிக்கு ஒருமுறை கிருமிநாசினி தெளிக்கப்படுகின்றன. பேருந்து முனையங்கள் மற்றும் நிறுத்தங்களில் உள்ள மேற்பரப்புகளும்கூட தினசரி அடிப்படையில் தூய்மைப்படுத்தி கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைக்கப்படும். பேருந்து பயணியர் தங்கள் கைவசம் தமது உபயோகத்திற்காக இதுபோன்ற கிருமி நாசினி, கைகளைக் கழுவும் சுகாதார பொருட்களை வைத்திருந்து தங்கள் கைகளை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

வழிதடங்கள் மற்றும் கால அட்டவணை பற்றிய தகவல்களுக்கு 905.874.2999 என்ற எண்ணை அழைக்கவும் அல்லது www.bramptontransit.com க்கு வருகை புரியவும். அடுத்த பேருந்து வரும் நேரத்தை அப்போதைக்கப்போதே அறிய உங்கள் ஸ்மார்ட்ஃபோன் அல்லது இதர மொபைல் சாதனத்தில் nextride.brampton.ca என்னும் வலைத்தளத்திற்கு செல்லவும். பயணத்திட்டம் செய்வதற்கான இதர குறிப்புகள் பெற www.triplinx.ca வருகை தரவும் அல்லது கூகிள் மேப்ஸ் ( Google Maps) செல்லவும்.

**ப்ராம்ப்ட்டன் பொழுதுபோக்கு**

அனைத்து பொழுபோக்கு நிகழ்ச்சிக்கு திட்டமிடல், மற்றும் கட்டிடங்கள் வாடகைக்கு எடுத்தல் ஆகியவை அடுத்த அறிவிப்பு வரும் வரை ரத்து செய்யப்படுகின்றன. செலுத்தப்பட்ட தொகை அவரவர் கணக்கில் வரவிலேயே இருக்கும். மேலும் தகவல்களுக்கு வருகை புரியவும்: recconnects@brampton.ca .

உங்கள் முழு உடல் தகுதியை கச்சிதமாக வைத்திருங்கள்; காகிதப்பூக்கள், காகித பொம்மைகள் செய்து பாருங்கள்; படங்கள் வரைவதில் தேர்ச்சி செய்து கொள்ளுங்கள்; ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாக அலுவலர்களால் பாசத்துடன் வழங்கப்படுகின்ற நிகழ்நிலை பயிற்சித் திட்டமாகிய ரெக் அட் ஹோம் (Rec At Home) வழியாக சுயமாக பயிற்சி செய்துகொள்ளுங்கள்! ரெக் அட் ஹோம் (Rec At Home) தளமானது www.brampton.ca/recreation என்னும் வலைத்தளத்தில் கிடைக்கின்றது.

**ப்ராம்ப்ட்டன் நூலகம்**

ப்ராம்ப்ட்டன் நூலக கிளைகள் அனைத்தும் அடுத்த அறிவிப்பு வரும் வரை மூடப்படுகின்றன. வார இறுதி கேளிக்கை, மற்றும் பொழுதுபோக்குகளுக்கு, ஒளிபரப்பாகும் திரைப்படங்களை பார்க்கவும் ஒலிபரப்பாகும் இசையைக் கேட்கவும்; அல்லது இ-புத்தகம் படிக்கவும்! எங்களுடைய டிஜிட்டல் தயாரிப்புகள், நிகழ்ச்சிதிட்டங்கள் மற்றும் சேவைகள் பற்றிய தகவல்களுக்கு வருகை புரியவும்: www.bramptonlibrary.ca அல்லது info@bramlib.on.ca. க்கு மின்னஞ்சல் செய்யவும்.

**ப்ராம்ப்ட்டன் விலங்குகளுக்கான சேவைகள்**

ப்ராம்ப்ட்டன் விலங்குகள் காப்பகம் விக்டோரியா தினம் வருகின்ற வாரத்தில், ஞாயிற்றுக்கிழமை மற்றும் திங்கட்கிழமை நாட்களில் மூடப்பட்டிருக்கும்.

சாலைகளில் விலங்குகள் கட்டுப்பாடு என்பது திங்கள் முதல் வெள்ளி வரை காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரையும், சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் காலை 8 மணி முதல் மாலை 6:30 மணி வரையும் அமலில் இருக்கும்; இது பின் வரும் அழைப்புக்களுக்கு மட்டுமே செவிசாய்க்கப்படும்:

- நோயுற்ற/காயப்பட்ட/ஆக்ரோஷமான வீட்டு மற்றும் காட்டு விலங்குகளை பிடித்து செல்லுதல்
- ஆக்ரோஷமான விலங்கு
- சுற்றித்திரியும் நாய்
- நாய்க்கடி விசாரணை
- அடைபட்ட தெருநாயைப் பிடித்து செல்லுதல்
- இறந்து கிடக்கும் விலங்கினை அகற்றுதல்

இந்த நேரங்களுக்கு அப்பால், அவசர கால அழைப்புக்களுக்கு மட்டுமே விலங்கு கட்டுப்பாட்டு அமைப்பினர் செவிசாய்ப்பார்கள்.

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca